

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், அகரம் பேரூராட்சியில் 21.07.2023 அன்று நகர்ப்புற சாலைகள் கட்டமைப்புத் திட்டத்தில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில், 1வது மற்றும் 5வது வார்டு பகுதியில் வடிகால் மற்றும் சிறு பாலத்துடன் கூடிய தார்ச்சாலை மேம்படுத்தல் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அருகில் அகரம் பேரூராட்சி தலைவர் நந்தகோபால், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி மனோரஞ்சிதம், ரெட்டியார்சத்திரம் பேரூராட்சி முன்னாள் தலைவர் சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

### தாய்மையை நிர்வாணப்படுத்திய மணிப்பூர்: ஒன்றிய அரசைக் கண்டித்து

# நெல்லையில் மகளிர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை, ஜூலை 23-

தாய்மையை நிர்வாணப் படுத்தி தலைகுனிய வைத்த மணிப்பூர், தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து நாளை (24.7.2023 - திங்கள்கிழமை) காலை 10 மணிக்கு திருநெல்வேலி வண்ணார்பேட்டை சபாநாயகர் செல்லப்பாண்டியன் சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். எனவும் - மகளிர் அணியினர், மகளிர் தொண்டரணியினர் மகளிர், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொள்வீர் எனவும் திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் கூட்டறிக்கை விடுத்துள்ளனர்.





அவர்களது அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப் படுத்தத் தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப்படுத்தப் பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்யப் பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக, ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் மணிப்பூர் சம்பவம் நடைபெற்ற உடனே தனது வன்மையான கண்டனத்தை சமூக வலைதளங்கள் மூலம் பதிவிட்டு தன்னுடைய வலுவான கண்டனத்தைப் பதிந்துள்ளார்கள்.

தாய்மையை நிர்வாணப்படுத்தித் தலைகுனிய வைத்த மணிப்பூர் தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து நாளை (24.7.2023 திங்கள்கிழமை) காலை 10 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு, மத்திய மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மகளிர் தொண்டரணி சார்பில் திருநெல்வேலி வண்ணார்பேட்டை சபாநாயகர் செல்லப்பாண்டியன் சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மாநில, மாவட்ட ,ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை, வார்டுகளில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மகளிர் அணியினர், மகளிர் தொண்டரணியினர் மகளிர், மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் கழக நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு வன்மையாக கண்டனத்தை தெரிவிக்க கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வருகிறது!

# உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் முழுமையாக கிடைக்கவில்லை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜூலை 23 -

1924ல் ஒப்பந்தம் துவங்கி 2018ல் உச்சநீதிமன்ற தீர்ப்பு வரை தமிழ்நாட்டுக்கு காவிரிநீர் முழுமையாக கிடைக்கவில்லை. தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வருகிறது என ‘தினகரன்’ நாளேடு 22.07.2023 தேதியிட்ட இதழில் ‘தொடரும் அநீதி’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு :-

தமிழ்நாட்டுக்கும், கர்நாடகாவுக்கும் இடையே காவிரி நீர் பங்கீடு செய்வது தொடர்பாக நீண்டகாலமாக பிரச்னை இருந்து வருகிறது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடக அரசு, தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிட வேண்டும். ஆனால், கர்நாடகா அரசு, பல நேரங்களில் உச்சநீதி மன்ற தீர்ப்பை பின்பற்றுவதில்லை. தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை திறந்து விடுவதில்லை. மேலும், தங்களுக்கே தண்ணீர் இல்லை என்ற காரணத்தை கூறி தப்பித்து வருகிறது. கர்நாடக அரசின் இந்த பிடிவாத போக்கினால், தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகள் பாதிக்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கும் உரிய நீர் கிடைக்காத சூழல் உருவாகிறது. இதற்கிடையே, காவிரிக்கு குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிதாக அணை கட்டவும் கர்நாடக அரசு முயற்சித்து வருகிறது. இதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. இதனால், இருமாநில தலைவர்கள் இடையே கருத்து மோதல்கள் வெடித்துள்ளன.



தினகரன்

ஜூலை 22, 2023 சனிக்கிழமை

தொடரும் அநீதி

தமிழ்நாட்டுக்கும், கர்நாடகாவுக்கும் இடையே காவிரி நீர் பங்கீடு செய்வது தொடர்பாக நீண்டகாலமாக பிரச்னை இருந்து வருகிறது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடக அரசு, தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிட வேண்டும். ஆனால், கர்நாடகா அரசு, பல நேரங்களில் உச்சநீதிமன்ற தீர்ப்பை பின்பற்றுவதில்லை. தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை திறந்து விடுவதில்லை. மேலும், தங்களுக்கே தண்ணீர் இல்லை என்ற காரணத்தை கூறி தப்பித்து வருகிறது. கர்நாடக அரசின் இந்த பிடிவாத போக்கினால், தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகள் பாதிக்கப்படுகிறது. மேட்டூர் அணைக்கும் உரிய நீர் கிடைக்காத சூழல் உருவாகிறது. இதற்கிடையே, காவிரிக்கு குறுக்கே மேகதாது என்ற

இந்நிலையில்தான், டெல்லியில் நேற்று முந்தினம் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஒன்றிய அரசின் நீர்வ ளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை சந்தித்து பேசியுள்ளார். தமிழ்நாட்டுக்கு, காவிரியில் திறந்துவிட வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு திறக்காமல் உள்ளது. இதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தையும் அவரிடம் வழங்கியுள்ளார்.

“கர்நாடக அரசு, காவிரியில், தமிழ்நாட்டுக்கு நடப்பாண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதம் 3ம் தேதி நிலவரப்படி 12.213 டிஎம்சி தண்ணீர் திறந்திருக்க வேண்டும். ஆனால், மிக குறைந்த அளவில் மட்டுமே தண்ணீர் கிடைத்துள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் காவிரி மேலாண்மை ஆணையம் தமிழகத்துக்கான தண்ணீரை திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனை முறையாக பின்பற்ற, கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்” எனவும் துரைமுருகன் தெரிவித்துள்ளார். அத்துடன், மேகதாதுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக அரசுக்கு அனுமதி வழங்கக்கூடாது எனவும் வலியுறுத்தி உள்ளார்.

ஏற்கனவே, கடந்த 5ம் தேதி ஒன்றிய அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்தை, துரைமுருகன் சந்தித்து இதே கோரிக்கையை முன்வைத்தார். அடுத்த 15 நாளில் மீண்டும் துரை முருகன் ஷெகாவத்தை சந்தித்து பேசி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1924ம் ஆண்டுகளில், வருடத்துக்கு 378.40 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகாவிடம் இருந்து பெற்று வந்த தமிழகம், அதை உறுதிசெய்ய கோரிக்கை விடுத்து, காவிரி தீர்ப்பாயத்தை நாட, 1991-ம் ஆண்டு காவிரி தீர்ப்பாயம் கொடுத்த இடைக்கால தீர்ப்பில் தமிழகத்தின் பங்கு 205 டி.எம்.சி.யாக குறைக்கப்பட்டது. இது நிச்சயம் போதாது என முறையிட, 2007ல் வந்த காவிரி தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு, 192 டி.எம்.சி.தான் தமிழகத்துக்கு வந்துசேரும் என்றது. இது, நியாயமற்றது என உச்சநீதிமன்றத்தை நாட, இன்னும் 14.75 டி.எம்.சி.யை குறைத்து, தமிழகத்துக்கான பங்கீடு 177.25 டி.எம்.சி.தான் என்றது.

இதற்காக போராடிய இந்த அரை நூற்றாண்டு காலத்தில், தமிழ்நாடு தன்னுடைய முழு உரிமையையும் இழந்து நிற்கிறது. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் பெற்றதை, அடுத்தடுத்து இழந்து வருகிறது தமிழ்நாடு. 1924-ல் ஒப்பந்தம் துவங்கி 2018-ல் உச்சநீதிமன்ற தீர்ப்பு வரை தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் முழுமையாக கிடைக்கவில்லை. தொடர்ந்து அநீதி இழைக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி கழுதூர் ஊராட்சியில் அரசு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அருண் தம்புராஜ் மற்றும் அரசு அலுவலர்கள், மங்களூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் திருமதி.சுகுணா, கே.என்.டி.சங்கர் மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராஜரத்தினம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஆர்.கே.நகரில் நலஉதவிகள்!

சென்னை, ஜூலை 23-

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி 42வது வட்டம், கழகத் தோழரும், சவுண்ட் சர்வீஸ் உரிமையாளருமான பாபு ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி ஆர்.கே.நகரில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர் தா.இளைய அருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஆகியோர் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கருணா, மாநில இலக்கிய அணி துணைச் செய லாளர் ஆர்.எம்.வி.ரவீந்திரன், பகுதிச் செயலாளர் லட்சுமணன், சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருது கணேஷ், வட்டச் செயலாளர் பரீ குமார், தமிழ்ச் செல்வன், இஷா பாலன், எல்.சீனிவாசன் மற்றும் ஜி.விநாயகமூர்த்தி, யுவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!




### மணிப்பூரில் பழங்குடியின மக்கள் மீது நடத்தப்படும் வன்முறை வெறியாட்டத்தைக் கண்டித்து

# திண்டுக்கல்லில் - மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!

திண்டுக்கல், ஜூலை 23-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின மகளிர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் மற்றும் கலவரங்களை தடுக்காத மனிதாபிமானமற்ற பி.ஜே.பி. அரசைக் கண்டித்து திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திண்டுக்கல், மணிக்கூண்டில் நாளை (24.07.2023 - திங்கள்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.





எனவே, அனைத்து மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணியினர் குறிப்பாக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியினர், உள்ளாட்சிமன்ற முன்னாள் இந்நாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் மற்றும் ஏராளமான மகளிர்களுடன் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஒன்றிய நரேந்திர மோடி அரசிற்கு கண்டனத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### தலைகுனிய வைத்த மணிப்பூர்! தடுக்கத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து

# தி.மு.க. மகளிர் அணி சார்பில் திருப்பத்தூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஜூலை 23-

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப் பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக ஊடக செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பாஜக அரசும் மகளிர்க்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலே தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி அவர்கள், தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் இக்கொடுமையைக் கண்டித்து நாளை (24/7/2023 திங்கட்கிழமை) காலை 9.30 மணி அளவில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் திருப்பத்தூர் மாவட்ட மகளிர் அணி சார்பில் திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளர் சாந்திசீனிவாசன் அவர்கள் தலைமையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்த உள்ளார்.



இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு கண்டனத்தை தெரிவிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

### மணிப்பூர் கலவரத்தை தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து

# தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தேனி, ஜூலை 23-

தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிவிப்பு.

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டு, பல உயிர்கள் பலியாகின. அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதியில் இழுத்துச் சென்று, கற்பழிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்த தாக ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளன. இந்நிகழ்வு அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இதுபோன்ற நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத்தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.



இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், பிரதமர் நரேந்திரமோடி வெளிநாட்டுப்பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கு எதிரான இக்கொடுமைகளை தடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறியது. மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலேயே முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்கள் தனது கண்டனத்தையும், வருத்தத்தையும் சமூக ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சை பதறவைக்கும் இக்கொடுமையை கண்டித்து நாளை (24.07.2023 - திங்கள்கிழமை) காலை 10.00 மணியளவில் சின்னமனூர் நகரம், மெயின் ரோடு ரவுண்டானாவில் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பாக மாவட்ட துணைச் செயலாளர் திருமதி.ஈஸ்வரி பிச்சை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. இன்பெண்ட் பனிமய ஜெப்ரின் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி.சாரதா சென்றாயன் ஆகியோர் தலைமையில், மாவட்ட மகளிர் அணி தலைவர் திருமதி.சாந்திதாஸ் மற்றும் மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் திருமதி. ஆ.தமயந்தி ஆகியோர் முன்னிலையில் தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளரும், கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கம்பம். நா.இராமகிருஷ்ணன் கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்த உள்ளார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்குமாறு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி முன்னாள் இணைச் செயலாளர் வி. ஆறுமுகபாண்டி, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 22.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.